தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி:15-3-2018

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**"வரும் 2022 ஆம் ஆண்டில் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் வகையில் 'வேளாண் அறிவியல் நிலையங்கள்' பங்காற்ற வேண்டும்" – நிபுணர்**

விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் வகையில், ஒவ்வொரு கிராமப்புற மாவட்டத்திலும் அமைந்திருக்கும் வேளாண் அறிவியல் நிலையங்கள் (கிருஷி விக்யான் கேந்திரா - KVK) பணியாற்றிட வேண்டும் என ஹைதராபாத்தில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் மண்டல இயக்குநர் முனைவர் Y.G. பிரசாத் கூறினார்.

அண்மையில் (மார்ச் 10, 2018) கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற "நிலையான வளர்ச்சிக்கு பண்ணை விரிவாக்கத்தை மேம்படுத்துதல்: எதிர்கால சவால்கள் மற்றும் வாய்ப்புகள் (INTFES-18)" என்ற சர்வதேச மாநாட்டின் நிறைவுரையினை ஆற்றுகையில், இத்தகைய சர்வதேச கருத்தரங்குகள், மற்ற நாடுகளில் பின்பற்றப்படும் விரிவாக்க அணுகுமுறைளை நம்முடைய உள்ளூர் சூழலில் பரிசோதித்து பயன் பெற வழி வகை செய்கின்றன எனக் குறிப்பிட்டுப் பேசினார்.

ஒரு இந்திய விவசாயியின் சராசரியான மாத வருமானம் தற்பொழுது ரூபாய் 6400 / - மட்டுமே. 2022 ஆம் ஆண்டளவில் அதை இரட்டிப்பாக்க, நாம் நமது உற்பத்தித்திறனை அதிகரித்து, உற்பத்திச் செலவினை குறைத்து, வருமானத்தினைக் கூட்ட வேண்டும். மதிப்புக்கூட்டுதல், விவசாயத்தில் வருவாயினை அதிகரிக்கும் திறனுக்கான வழிகளில் ஒன்றாகும் எனவும் குறிப்பிட்டார்.

பல்கலைக் கழக விரிவாக்க கல்வி இயக்குனரும், விரிவாக்கக் கல்விச் சங்கத்தின் (Extension Education Society - EES) தலைவருமான முனைவர். ஹெ. பிலிப், தனது உரையில், இக்கருத்தரங்கில் உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து 400 க்கும் மேற்பட்ட

பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் எனக் குறிப்பிட்டார். மாநாட்டின் போது வெளியிடப்பட்ட மின்னிதழான 'விரிவாக்கக் கல்வி ஆய்விதழ்' ஒரு திறந்த அணுகல் (Open access) பதிப்பாகும். இதனை www.extensioneducation.org என்ற தளத்தில் காணலாம் எனவும் அவர் தெரிவித்தார். மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலைய முதன்மை விஞ்ஞானி, முனைவர் எஸ். உஷாராணி, கூட்டத்தை வரவேற்றார். நிறைவாக, விரிவாக்கக் கல்வி ஆய்விதழின் முதன்மை ஆசிரியரும், ஐ.சி.ஏ.ஆர்-கரும்பு இனப்பெருக்க நிறுவன முதன்மை விஞ்ஞானியுமான முனைவர் து. புத்திய பிரதாப், நன்றி நவின்றார்.

மாநாட்டில் 50 சிறந்த ஆராய்ச்சிப் படைப்புகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. நிறைவுவிழாவின் போது விரிவாக்கத் துறையின் மூத்த 11 ஆராய்ச்சியாளர்கள் கவுரவிக்கப் பட்டனர். இளம் விஞ்ஞானிகளுக்கன விருதினை முனைவர் பி. சிவராஜ் மற்றும் முனைவர் எஸ். சங்கீதா பெற்றனர்.

*மக்கள் தொடர்பு அலுவலர்*